सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்
## யாழ்ப்பாணம்

### ஊடக அறிக்கை

**இந்தியாவில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்புக்கு செல்லவிரும்பும் மாணவர்களுக்கு**

**இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்தால்(EdCIL) நடத்தப்படும்**

## வழிகாட்டல் கருத்தரங்கு

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

01 ஒக்டோபர் 2014, மு.ப. 10.00 – பி.ப. 01.00 மணி வரை

வடமாகாணத்திலுள்ள க.பொ.த உயர்தர மாணவர்களின் நன்மை கருதி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகமும் வட மாகாண கல்வி, விளையாட்டுத்துறை, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சும், இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்துடன் இணைந்து உயர்கல்வியை இந்தியாவில் தொடர்வது பற்றிய கருத்தரங்கு மற்றும் வழிகாட்டல் அமர்வுகளை 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் **தம்பர் மண்டபத்தில்** அன்று **மு.ப. 10.00 மணிக்கு** நடத்தவுள்ளன.

பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் தமது உயர்கல்வியை தொடர்வதற்காக உலகின் பலபாகங்களிலிருந்தும் வருடாந்தம் இந்தியாவிற்கு செல்கின்றனர். இலங்கை மாணவர்களும் கலாச்சார ரீதியில் ஒத்த தன்மை இருப்பதாலும் உலகத்தரக் கல்வியை மேற்குலகுடன் ஒப்பிடுகையில் குறைவான செலவில் பெற்றுக்கொள்ள முடிவதால் இந்தியாவை உயர்கல்வியைத் தெடர்வதற்கான விருப்பத்திற்குரிய இடமாகக் கருதுகின்றனர். இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனமானது 2011 மற்றும் 2013 இல் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக கல்விக் கண்காட்சியை நடாத்தியுள்ளது.

இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவன அதிகாரிகள் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் தம்மோடு இணைந்துள்ள நிறுவனங்கள், இந்தியக் கல்வி முறைமை, இந்திய பல்கலைக்கழக மற்றும் நிறுவனங்களுக்கான தமது நிறுவனத்தின் ஊடான அனுமதி முறைமை பற்றிய தகவல்களை கருத்தரங்கில் பகிர்ந்துகொள்வர்.

இந்திய அரசானது இந்தியக் கல்வி வழிகாட்டல் நிறுவனத்தினை வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டினருக்கான இந்தியக் கல்வி அனுமதிக்கான ஒரே முகவரமைப்பாக நியமித்துள்ளது. இந்நிறுவனம் வெளிநாட்டு மாணவர்களுக்கு அனைத்தும் உள்ளடங்கிய வசதிகளை வழங்குகிறது.

இவற்றில் சில:

- இந்தியக் கல்வி பற்றிய தேவையான தகவல்களை மாணவருக்கு வழங்கல்
- மாணவர்களின் தேவைக்கேற்ப பொருத்தமான கற்கை நெறிகளை அடையாளம் காணல்
- விண்ணப்பங்களை தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்புதலும் தற்காலிக அனுமதிக் கடிதம் கிடைக்கும் வரை அவ்விடயத்தைப் பின் தொடர்தலும்.
- பொருத்தமான அமைச்சுகளிடமிருந்து தேவையான அனுமதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- தற்காலிக அனுமதிக் கடிதங்களை மாணவர்களுக்கு அனுப்புதல்
- இந்தியா செல்வதற்கு முன்னதான தயார்படுத்தல்கள் மற்றும் நுழைவிசைவு பெறுதலுக்கு வசதி செய்தல்.
- இந்தியாவிற்கு குழுவாக வந்து சேரும் 05 அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களை வரவேற்றல்
- தேவையேற்படின் தயார்ப்படுத்தல் கற்கை நெறிகளை ஒழுங்கு செய்தல்
- மாணவருக்கான உள்ளக பாதுகாவலராக செயற்படல்

**ஆர்வமுள்ள மாணவர்களும், அவர்களது பெற்றோரும் ஆசிரியர்களும் கல்வியாளர்களும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.**

***இந்திய கல்வி வழிகாட்டல் நிறுவனம் பற்றிய குறிப்பு***

*இந்நிறுவனமானது 1981 ஆம் ஆண்டு இந்தியாவின் கல்வி மற்றும் கலாச்சார அமைச்சின் (1985 ஆம் ஆண்டில் மனிதவள அபிவிருத்தி அமைச்சாக மீளமைக்கப்பட்டது) கீழ் பொதுத்துறை நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம் கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி ஆகிய துறைகளின் பல்வேறு பகுதிகளில் உள்நாட்டிலும் உலகளாவிய அளவிலும் வழிகாட்டல் மற்றும் தொழினுட்ப சேவைகளை வழங்கி வருகிறது.*

*கடந்த தசாப்தத்தில் இந்நிறுவனமானது பொதுத்துறைத் திணைக்களத்தின் திறமைக்கான விருதுகளை 4 வருடங்களாக பெற்றுள்ளது. இந்நிறுவனத்துக்கு 1998-99 இற்கான திறமைக்கான பிரதமர் விருது வழங்கப்பட்டுள்ளதுடன் இந்திய அரசால் 'சிறு ரத்தின நிறுவனமாக' வகைப்படுத்தப்பட்டுள்ளது.*